## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 98/2022</u>

நாள் 15.04.2026

PW 1 – சதீஷ்

த/பெ – பொன்னுசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of April 2026.**

### <u>குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து நம்பியாம்பாளையம் கிராம சர்வே எண். 240ல் உள்ளது. அதனுடைய மொத்த விஸ்தீரணம் 4.85 ஏக்கர் உள்ளது. அந்த 4.85 ஏக்கர் சொத்தை பொறுத்து கறார் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து உட்பிரிவுகள் ஏதும் ஏற்படாமல் ஒன்றாகத்தான் உள்ளது. அந்த மொத்த விஸ்தீரணத்தில் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் நான் 25 சென்ட்டை கிரையம் வாங்கியுள்ளேன். 4.85 ஏக்கர் சொத்திற்குரிய கூட்டு உரிமையாளர்கள் யார் யார் என்றால் சுமார் 80 பேர்கள் இருக்கிறார்கள். அந்த கூட்டு உரிமையாளர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், நான் கிரையம் பெற்ற 25 சென்ட் இடம் 37–1/2 சென்ட்டில் தான் உள்ளது. அதனால் மற்ற கூட்டு பங்குதாரர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. தாவா சர்வே எண்.240ன் கூட்டுப் பங்குதாரர்களை கட்சி சேர்க்காததால் நான் தாக்கல் செய்துள்ள இந்த பாக தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2. நான் கிரையம் பெற்ற 25 சென்ட் தண்டபாணி 1, சடையப்பன் 2, தெய்வசிகாமணி 3, கலைவாணி 4, கோகிலாமணி 5, சிவகாமி 6 ஆகியோரின் அப்பாவின் சின்னியகவுண்டருக்கு பாகப்பிரிவினை மூலம் வந்த பூர்வீக சொத்து ஆகும். அந்த சின்னியகவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மனைவி கருணையம்மாள், மகன்கள் முத்துசாமி, சடையப்பன், தெய்வசிகாமணி ஆகியோருக்கு கடந்த 24.07.1956–ம் தேதியில் பதிவு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சின்னியகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 1.50 ஏக்கரில் பொதுவில் 1/4 பங்கு சொத்தை பொறுத்துதான் 24.07.1956–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவருடைய மனைவி கருணையம்மாள் அவருக்குரிய பொதுவில் 1/4 பங்கை முத்துசாமி, சடையப்பன், தெய்வசிகாமணி ஆகியோருக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். மேற்படி முத்துசாமி, சடையப்பன், தெய்வசிகாமணி ஆகியோருக்கு இடையே தற்போது வரை எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

3. நான் சடையப்பன் மற்றும் தெய்வசிகாமணி மற்றும் அவர்களது வாரிசுகளிடமிருந்துதான் கிரையம் பெற்றேன். சின்னியகவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்த 37–1/2 சென்ட்டில் நான் கிரையம் பெற்ற 25 சென்ட் போக மீதமுள்ள 12 – 1/2 சென்ட் இடத்தை பொறுத்து முத்துசாமி அவரது மகள்களுக்கிடையே பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். அதில் பொதுவில் 12–1/2 சென்ட்டை இந்த

பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் நான் சொல்லும் 37–1/2 சென்ட் இடத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள எனது பெயரில் உள்ள கிரையப்பத்திரம் , முத்துசாமி வகையறா ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆகியவைகள் பிரிவுபடாத சொத்தை பொறுத்துதான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதால் மொத்த விஸ்தீரணத்தின் கூட்டுபங்குதாரர்களையும் இந்த வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றும், ஆனால் நான் அந்த கூட்டுபங்குதாரர்களை கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த பாகதாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.15 19:07:09 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**